RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-3 இதழ்-350 17 டிசம்பர் செவ்வாய்க்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## ஆதவ் அர்ஜுனாவை நீக்க வேண்டும் என்பது என் நோக்கமில்லை: திருமாவளவன் விளக்கம்

சென்னை, டிச.17

"விசிகவில் இருந்து ஆதவ் அர்ஜுனாவை நீக்க வேண்டும் என்பது என் நோக்கமில்லை" என அக்கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இடைநீக்கம் குறித்து பொதுவெளியில் ஆதவ் அர்ஜுனா கூறிய கருத்து கட்சிக்கு எதிராகவும், கட்சி தலைமைக்கு எதி ாகவும் தான் இருந்தது. அந்த விளக்கம் அவருடைய பார்வையில் சரியானதாக இருந்தால் கூட, ஒரு கட்சியின் நடைமுறைக்கு ஏற்புடையதாக இல்லை. தனக்கு எல்லாம் தெரிந்தாலும் கூட, பேசுவதெல்லாம் சரிதான் என்றாலும் கூட கட்சியுடன் இணைந்து, கட்சி கட்டுப்பாட்டுக்குள் செயல்பட வேண்டும். அதுதான் முக்கியம்.

ஆதவ் அர்ஜுனாவிடம் ஆர்வம் அதிகமாக உள்ளது. உடனே எதையும் சாதிக்க வேண்டும் என்று துடிக்கிறார். ஒரு கட்சிக்குள் வந்துவிட்டால் எவ்வளவு பெரிய ஆற்றல் படைத்தவர்களாக இருந்தாலும் கூட, அந்த கட்சிக்கு கட்டுப்பட வேண்டும். அவரது கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும் கூட கட்சியின் நடைமுறைக்கு இணங்க வேண்டும். இதை அவரிடம் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறோம். இந்நிலையில் ஆதவ் கட்சியில் இருந்து விலகுவதாக எடுத்த முடிவு, அவருக்கு சரி என்கிற அடிப்படையில் எடுத்திருக்கிறார். அவரை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என்பது என் நோக்கம் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை), 'விசிகவிலிருந்து விலகுகிறேன்; சமத்துவம், சமநீதி அடிப்படையில் எனது அரசியல் பயணம் தொடரும். என்னைப் பற்றிய தேவையற்ற விவாதங்கள் பொதுவெளியில் தொடராமல் இருக்க வேண்டும் என்ற நோக்கில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியிலிருந்து முழுமையாக என்னை விடுவித்துக்கொள்வது என்று முடிவெடுத்துள்ளேன்." என்று விலகலை அறிவித்து அதற்கான காரணங்களையும் அடுக்கியிருந்தார். இந்நிலையில், 'விசிகவில் இருந்து ஆதவ் அர்ஜுனாவை நீக்க வேண்டும் என்பது என் நோக்கமில்லை' என்றுதிருமாவளவன் முன்வைத்துள்ள கருத்து கவனம் பெறுகிறது.

## எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கம் கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்கேற்கிறேன்: சீமான்

சென்னை, டிச.17



எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கம் தொடர்பான கருத்துக் கேட்பு கூட்டத்தில் சீமான் பங்கேற்கவுள்ளார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் எண்ணூரில் அமைத்து வரும் நிலக்கரி அனல் மின் நிலையத்துக்காக 2009ல் வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதியின் கால அவகாசம் முடிவடைந்துள்ளது. இதையடுத்து அனல் மின் நிலைய விரிவாக்கத்துக்கு தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி புதிய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக கருத்துக் கேட்பு கூட்டம் வரும் டிச.20ம் தேதி எர்ணாவூரில் நடைபெறும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

அதன்படி திருவள்ளூர் மாவட்டம் எர்ணாவூர் மகாலட்சுமி நகரில் உள்ள காமராஜர் மாளிகையில் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ள எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் தொடர்பான கருத்துக் கேட்பு கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் பங்கேற்க உள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "பல்வேறு தொழிற்சாலைகளின் குவியலால் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகி, அதன் விளைவுகளால் அவதிப்பட்டு வரும் வடசென்னை எண்ணூர் பகுதியில், மீண்டும் ஒரு அனல் மின் நிலைய விரிவாக்க திட்டம் முன்வைக்கப்படுகிறது. இதையொட்டிய கருத்துக் கேட்பு கூட்டமானது வரும் 20ம் தேதி எர்ணாவூரில் நடைபெறவுள்ளது.

நிலம், நீர், காற்று மாசுபட்டு ஒவ்வொரு நாளும் கடும் பாதிப்புகளை சந்தித்துவரும் எண்ணூர் மக்களின் குரலாக இக்கூட்டத்தில் பங்கேற்று, எனது கருத்துகளை பதிவு செய்யவுள்ளேன். இந்த கூட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்துக்கொண்டு, தங்களது கருத்துகளையும் பதிவு செய்வதன் மூலமே சூழலியல் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்." என்று தெரிவித்துள்ளார்.

## விளச்பி நிகழ்ச்சியில் பங்கேற்ற நீதிபதி பதவி நீக்க அறிவிப்பில் கையெழுத்திடாதது ஏன்? அதிமுகவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கேள்வி

சென்னை, டிச.17



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் நேற்று வெளியிட்ட அறிக்கை: கடந்த 8ம் தேதி உத்தரப்பிரதேசம், அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவ், அங்கு நடந்த விஸ்வ இந்து பரிஷத் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார்.

இந்த அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வில் நீதிபதி எந்த முறையில் கலந்து கொண்டாரா என்ற வினா எழுகிறது. சட்டவிதிகளை மீறி இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நீதிபதி சேகர் குமார் யாதவ், முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக விஷம் கக்கும் வெறுப்பு பேச்சும் பேசியுள்ளார்.

நீதித் துறையின் மாண்புக்கு களங்கம் ஏற்படுத்தி, அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையான மதச்சார்பற்ற பண்பை தகர்த்து, அநாகரிகமாக செயல்பட்ட, அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவுக்கு கண்டனம் தெரிவிக்கவும், அவரை நீதிபதி பொறுப்பில் இருந்து நீக்கவும், நாடாளுமன்ற விதிமுறைகளை பின்பற்றி எதிர்க்கட்சி மாநிலங்களவை உறுப்பினர்கள் 'இம்பீச்மெண்ட்' அறிவிப்பு கொடுத்துள்ளனர். இந்த அறிவிப்பில் அஇஅதிமுக கையெழுத்து போடவில்லை என்பது அதன் சந்தர்ப்பவாத செயலை வெளிப்படுத்துகிறது.

பாஜகவோடு கூட்டணி இல்லை எனில், நீதிபதியின் வகுப்புவாத வெறுப்பேற்றும், மதவெறி வன்ம பேச்சை கண்டித்து, மாநிலங்களவை உறுப்பினர்கள் 55 பேர் கையெழுத்திட்டு மாநிலங்களவை செயலாளரிடம் கொடுத்துள்ள அறிவிப்பு கடிதத்தில் அதிமுக உறுப்பினர்கள் கையெழுத்துப் போடாமல் நழுவிக் கொண்டது ஏன்? இதுகுறித்து நாட்டு மக்களுக்கு அஇஅதிமுக விளக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சென்னை நல்லூர் சுங்கச்சாவடியில் சுங்கக் கட்டணம் குறைகிறது

சென்னை, டிச.17



தமிழ்நாட்டில் முதல் முறையாக, சென்னை தடா தேசிய நெடுஞ்சாலையில் நல்லூர் சுங்கச்சாவடியில் சுங்கக் கட்டணம் 15 சதவீதம் வரை குறைகிறது.

இலகுரக மோட்டார் வாகனங்கள் (எல்எம்வி) மற்றும் மினி பஸ்களுக்கான கட்டணம் ரூ.20 குறைக்கப்படும், அதாவது டோல் கட்டணம் ரூ.125ல் இருந்து ரூ.105 ஆக குறைக்கப்படும். இதே போல், லாரிகள் மற்றும் பேருந்துகளுக்கான டோல்கேட் கட்டணம் ரூ.45 குறைக்கப்படும். இந்த வாகனங்களுக்கான சுங்க கட்டணம் ரூ.265ல் இருந்து ரூ.220 ஆக குறைக்கப்படும்.

## ஆண்டாள் கோயிலில் இளையராஜாவுக்கு அவமதிப்பா? ஸ்ரீவில்லி. கோயில் நிர்வாகம் மறுப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், டிச.17

"ஆண்டாள் கோயிலில் இளையராஜா அவமதிக்கப்படவில்லை. கோயில் நிர்வாகம் சார்பில் அவருக்கு முழு மரியாதை அளிக்கப்பட்டது. இளையராஜாவும் ஆண்டாள் தாயாரை பக்தியுடன் மன நிறைவுடன் தரிசித்துச் சென்றார்." என்று ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகள் விளக்கம் அளித்துள்ளார்.



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் ஆடிப்பூர கொட்டகையில் மார்கழி மாத தொடக்கத்தை முன்னிட்டு திவ்ய பாசுரம் இசை மற்றும் பரத நாட்டிய நிகழ்ச்சி நேற்று இரவு நடைபெற்றது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர், ஸ்ரீ திர்தண்டி சின்ன ஸ்ரீமன் நாராயண ராமானுஜ ஜீயர் தலைமை வகித்தனர். இளையராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு இசைஞானி இளையராஜா இசையமைத்த திவ்ய பாசுரம் ஆல்பத்தில் ஆண்டாள் பாசுரங்களை இசைக்கலைஞர்கள் பாடினர். தொடர்ந்து பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஆண்டாள் கோயிலுக்கு வந்த இளையராஜாவுக்கு இந்து சமய அற நிலையத்துறை இணை ஆணையர் செல்லத்துரை தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆண்டாள் சந்நிதி, நந்தவனம், பெரிய பெருமாள் சந்நிதி ஆகியவற்றில் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர், ஸ்ரீ திர்தண்டி சின்ன ஸ்ரீமன் நாராயண ராமானுஜ ஜீயர் ஆகியோருடன் சென்று இளையராஜா சுவாமி தரிசனம் செய்தார்.

ஆண்டாள் சந்நிதியில் கருவறைக்கு முன் உள்ள அர்த்த மண்டபத்திற்கு வெளியே வசந்த மண்டபத்தில் நின்றே பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். நேற்று இரவு ஜீயர்களுடன் இளையராஜா சுவாமி தரிசனம் செய்ய சென்ற போது, வசந்த மண்டபத்தை தாண்ட அர்த்த மண்டப வாசல் அருகே நின்றார். அப்போது கோயில் அர்ச்சகர் சின்ன ஜீயரிடம், வசந்த மண்டபத்தில் நின்று சுவாமி தரிசனம் செய்ய வேண்டும் என கூறினார். அதை சின்ன ஜீயர் இளையராஜாவிடம் கூறியதும், அவர் அர்த்த மண்டப வாயிலில் நின்று சுவாமி தரிசனம் செய்தார்.

கோயில் அர்ச்சகர்கள் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர், ஸ்ரீ திர்தண்டி சின்ன ஸ்ரீமன் நாராயண ராமானுஜ ஜீயர், இளையராஜா ஆகிய 3 பேருக்கும் ஆண்டாள் சூடிய மாலை மற்றும் பட்டு வஸ்திரம் கட்டி மரியாதை செய்தனர். இணை ஆணையர் ஆண்டாள் படம் மற்றும் பிரசாதம் வழங்கினார். தொடர்ந்து ஆடிப்பூர கொட்டகையில் நடந்த திவ்ய பாசுரம் இசை நிகழ்ச்சி மற்றும் பரத நாட்டிய நிகழ்ச்சியை ஜீயர்களுடன் சேர்ந்து இளையராஜா கண்டு களித்தார்.

இந்நிலையில், இளையராஜா அவமதிக்கப்பட்டதாக செய்திகள் வெளியான நிலையில், "ஆண்டாள் கோயிலில் இளையராஜா அவமதிக்கப்படவில்லை. கோயில் நிர்வாகம் சார்பில் அவருக்கு முழு மரியாதை அளிக்கப்பட்டது. இளையராஜாவும் ஆண்டாள் தாயாரை பக்தியுடன் மன நிறைவுடன் சென்றார்." என்று ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகள் விளக்கம் அளித்துள்ளார்.

## உலக செஸ் சாம்பியன் குகேஷுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு

சென்னை, டிச.17




உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்று சென்னை திரும்பிய குகேஷுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நாளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் குகேஷுக்கு பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷ் இன்று (டிச.16) சென்னை வந்தடைந்தார். சென்னை விமான நிலையத்தில் அவருக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துறை செயலாளர் அதுல்யா மிஸ்ரா குகேஷுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். மேலும் அகில இந்திய செஸ் கூட்டமைப்பு நிர்வாகிகள், குகேஷ் படித்த தனியார் பள்ளியின் சார்பிலும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் குகேஷுக்கு மலர்களைத்தூவி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய குகேஷ், "உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்று திரும்பியது மகிழ்ச்சி அளிப்பதாகவும், தன்னை தொடர்ந்து ஊக்கப்படுத்தி வரும் இந்திய ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்." எனக் கூறினார்.

ஏற்கெனவே, உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு தமிழக அரசு சார்பில் ரூ.5 கோடி பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழக முதல்வர் தலைமையில் கலைவாணர் அரங்கில் குகேஷுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது. இன்று குகேஷ் படித்த தனியார் பள்ளியில் நடைபெறும் பாராட்டு விழாவில் குகேஷ் கலந்து கொள்கிறார்.

உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடைபெற்றது. இதில் நடப்பு சாம்பியனான சீனாவின் டிங் லிரெனுடன், இந்திய கிராண்ட் மாஸ்டரான குகேஷ் மோதினார். 14 சுற்றுகளை கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றில் டிங் லிரென் வெற்றி பெற்றார். 2வது சுற்று டிராவில் முடிந்த நிலையில், 3வது சுற்றில் குகேஷ் வெற்றி பெற்றார். இதன் பிறகு நடைபெற்ற அடுத்த 7 சுற்றுகளும் தொடர்ச்சியாக டிராவில் முடிவடைந்தன.

இதையடுத்து நடைபெற்ற 11வது சுற்றில் குகேஷ் வெற்றி பெற்று தொடர்ச்சியான டிராக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன் 6 புள்ளிகளை பெற்று முன்னிலை வகித்தார். 12வது சுற்றில் டிங் லிரேன் வெற்றி பெற்றார். இதன் மூலம் இருவரும் 66 என்ற சம நிலையை எட்டினர். 13 வது சுற்றுபுதன்கிழமை (டிச.11) நடை பெற்றது. அதில் இருவரும் 6.5 6.5 புள்ளிகள் பெற்றதால் ஆட்டம் டிரா ஆனது

இந்நிலையில் வெற்றியை நிர்ணயிக்கும் 14வது சுற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் குகேஷ் ஆதிக்கம் செலுத்தி வந்தார். இருவரும் ஈடு கொடுத்து விளையாடி வந்தனர். நீண்ட நேரம் எடுத்துக்கொண்ட போட்டியில் குகேஷ் தனது 58வது நகர்த்தலில் டிங் லிரெனை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை வென்று அசத்தினார்.

## உலகப் புகழ்பெற்ற தபேலா மேதை ஜாகிர் உசேன் மறைவு

மும்பை, டிச.17

உலகப் புகழ்பெற்ற தபேலா மேதை ஜாகிர் உசேன் காலமானார். அவருக்கு வயது 73. அவரது மறைவை குடும்பத்தினர் உறுதி செய்துள்ளனர்.

இது தொடர்பாக அவரது குடும்பத்தினர், "ஜாகிர் உசேன் இரண்டு வாரங்களாகவே அமெரிக்காவின் சான்பிரான் ஸிஸ்கோ நகர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்ததால் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் அவர் நுரையீரல் பிரச்சினையின் காரணமாக உயிரிழந்தார்." என்று தெரிவித்துள்ளனர்.

வாழ்க்கை வரலாறு: உஸ்தாத் ஜாகிர் உசேன் 1951ம் ஆண்டு மார்ச் 9ம் தேதி மும்பையில் பிறந்தார். இவரது தந்தை பிரபல இசைக் கலைஞர் அல்லா ராக்கா. மகனுக்கு 3 வயது முதலே தபேலா கற்பித்தார். பிறவி மேதையான ஜாகிர் உசேன் 5வது வயதில் தபேலா வாசிக்கத் தொடங்கினார்.

இளமைப் பருவம் மும்பையிலேயே கழிந்தது. செயின்ட் சேவியர் கல்லூரியில் பட்டம் பெற்றார். 'என் அடிச்சுவட்டில் தபேலா வாசித்தாலும், உனக்கென்று தனியான அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்' என்றார் தந்தை. அவரது ஆசைப்படியே, தபேலா இசையில் தனி முத்திரை பதித்தார்.

இசைப் பயணம் மேற்கொள்வதை 11 வயதில் தொடங்கினார். 1970ல் இசை நிகழ்ச்சி நடத்த அமெரிக்கா சென்றார். அதுமுதல் இவரது சர்வதேச இசைப் பயணம் தொடங்கியது. இந்தியாவில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் இவரது இசை ஒலிக்கத் தொடங்கியது. ஆண்டுக்கு 150க்கு மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

'லிவிங் இன் தி மெட்டீரியல் வேர்ல்டு' என்ற இவரது முதல் இசை ஆல்பம் 1973ல் வெளி வந்தது. தொடர்ந்து பல ஆல்பங்களை வெளியிட்டார். இவரது 'மேக்கிங் மியூசிக்', கிழக்கு மேற்கு ஃப்யூஷன் வகையின் தலைசிறந்த ஆல்பமாக கருதப்படுகிறது.



உலகப் புகழ்பெற்ற இசைக் கலைஞர்களுடன் கூட்டாக சேர்ந்து பல இசைக் குழுக்களை நிறுவியவர். ஹாங்காங் சிம்பொனி, நியூ ஆர்லியன்ஸ் சிம்பொனி ஆகியவற்றிலும் பங்கேற்றுள்ளார். அமெரிக்க இசைக் கலைஞர் பில் லாஸ்வெல்லுடன் இணைந்து 'தபேலா பீட் சயின்ஸ்' என்ற பிரம்மாண்ட இசைக் குழுவை நிறுவினார்.

'வானப்பிரஸ்தம்' என்ற மலையாளத் திரைப்படத்துக்கு இசையமைத்து, அதில் நடித்தார். இஸ்தான்புல் சர்வதேச திரைப்பட விழா, மும்பை சர்வதேச திரைப்பட விழா, தேசிய திரைப்பட விருது விழா ஆகியவற்றில் இது விருதுகளைக் குவித்தது.

'இன் கஸ்டடி', 'தி மிஸ்டிக் மஸார்' உட்பட பல திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். பல திரைப்படங்கள், ஆவணப் படங்களிலும் தனியாகவும் பல்வேறு இசைக் குழுவினருடன் சேர்ந்தும் இசையமைத்துள்ளார். ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் வருகைதரு பேராசிரியராகவும் பணியாற்றியவர்.

பல திரைப்படங்களில் நடித்துள்ளார். 'ஜாகிர் அண்ட் ஹிஸ் ஃப்ரெண்ட்ஸ்' திரைப்படமும், 'தி ஸ்பீக்கிங் ஹேண்ட்: ஜாகிர் உசேன் அண்ட் தி ஆர்ட் ஆஃப் தி இந்தியன் டிரம்' ஆவணத் திரைப்படமும் பிரபலமானவை.

பத்மஸ்ரீ விருதை 37 வயதில் பெற்றார். 1992ல் 'கிராமி' விருது பெற்றார். தாளவாத்தியப் பிரிவுக்கு முதன்முதலாக வழங்கப்பட்ட விருது இது. மீண்டும் 2009ம் ஆண்டிலும் 'கிராமி' விருது பெற்றார். பத்ம பூஷண், சங்கீத நாடக அகாடமி உள்ளிட்ட விருதுகளையும் பெற்றுள்ளார். பாரம்பரிய இசைக்காக அமெரிக்காவில் வழங்கப்படும் கலை மற்றும் பண்பாட்டு ஃபெலோஷிப் பெற்றவர். 2023 ஆம் ஆண்டு பத்ம விபூஷண் விருது பெற்றார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் கலந்துகொள்ளும் அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சி கன்னியாகுமரி அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில் நடைபெறுவதையொட்டி நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்எ.வ.வேலு, பொதுப்பணித்துறை அரசு செயலாளர்மன்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, முன்னாள் அமைச்சர் மற்றும் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர்பாலசுப்பிரமணியம் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# திண்டுக்கல் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 20 பயனாளிகளுக்கு ரூ.21.62 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவி

திண்டுக்கல், டிச.17

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா. பூங்கொடி, இ.ஆ.ப., தலைமையில் இன்று(16.12.2024) நடைபெற்றது.



தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திங்கள்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது. இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 218 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக் கள் மீது விரைந்து நடவ டிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இன்றையதினம், திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பிலான கடனுதவி, தொழிலாளர் நலவாரியம் சார்பில் விபத்து மரண உதவித்தொகையாக 7 பயனாளிகளுக்கு ரூ.17.25 இலட்சம் மதிப்பிலும், 9 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ.1.80 இலட்சம் மதிப்பிலான உதவித்தொகை மற்றும் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை கொடை நிதியிலிருந்து ஒரு பயனாளிக்கு ரூ.7,000 மதிப்பிலான தையல் இயந்திரம் என மொத்தம் 20 பயனாளிகளுக்கு ரூ.21.62 இலட்சம்மதிப்பிலானநலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

மேலும், மாவட்ட, ஒன்றிய அளவில் தரமான பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த பால் உற்பத்தியாளர்கள், சங்க செயலாளர்கள் மற்றும் தொகுப்பு பால் குளிர்விப்பு மையசெயலாளர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.10,000, இரண்டாம் பரிசாக தலா ரூ.5,000 மற்றும் மூன்றாம் பரிசாக தலா ரூ.5,000 பரிசுத்தொகை மற்றும் விருதுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மு.முருகேஸ்வரி, தனித்துணை ஆட்சியர்(சமூக பாதுகாப்புத் திட்டம்) கங்காதேவி, துணை ஆட்சியர்(பயிற்சி) செல்வி ராஜேஸ்வரிசுவி, திண்டுக்கல் ஆவின் பொது மேலாளர் மரு.கே.வாணீஸ்வரி, துணைப் பதிவாளர்(பால்வளம்) பவனந்தி, உதவிப் பொது மேலாளர் மரு.என்.பாபு, கூட்டுறவு சார்பதிவாளர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பொழிச்சலூர் ஊராட்சியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கல்வி உதவித்தொகை வழங்கல்

செங்கல்பட்டு டிச.17



செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சி சார்பில் தமிழக வெற்றிக் கழகம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு எஸ்.ஜான் ஏற்பாட்டில் வாழ்வாதரம் இழந்து தவிக்கும் குடும்பத்தினற்க்கு ரமேஷ் மற்றும் அனுஜா மகள் கீர்த்தனா

மேற்படிப்புக்காக கல்வி உதவித்தொகை செங்கல்பட்டு மேற்கு மாவட்டத் தலைவர் மின்னல் வி.குமார் ஐக்கிய திருகரங்காளால் அந்த குடும்பத்திற்கு படிப்பிற்கான கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியின் மாவட்ட தலைமை தம்பிராஜ், தொகுதி தலைவர் டி.சுறா ரவி, தொகுதி துணைத்தலைவர்.

பார்த்திபன், மாவட்ட தலைமை மணி ஜெயமோகன், பொழிச்சலூர் பகுதி பொருளாளர் கே.சந்துரு, பொழிச்சலூர் மகளிர் அணி தலைமை துர்க்கேஷ் நந்தினி,

இந்துமதி, வழக்கறிஞர் பிரிவு ரெபேக்கா, வழக்கறிஞர் பிரிவு பிரசாத் குமார் பொழிச்சலூர் 10வது வார்டு வினோத்குமார், பிரதீப் குமார், மற்றும் கே.எஸ். ஆர்.சுரேஷ், பொழிச்சலூர் 13வது வார்டு அருண்குமார், பொழிச்சலூர் பகுதி 15வது வார்டு ஜேக்கப், பொழிச்சலூர் 8வது வார்டு ஹர்ஷா, 11வது வார்டு சுந்தர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் குலாலர் பாளையம் மார்கழி 1ம் தேதியை முன்னிட்டு இருமுடிப்பிரியன் ஐயப்பா சேவா சங்கம் நடத்தும் 12ம் ஆண்டு அன்னதானம் விழா காலை 9:00 மணி முதல் கல்கத்தா காளியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்னதான விழா தலைவர் சரவணன் நதி, செயலாளர் கருப்புசாமி, பொருளாளர் ஜெயச்சந்திரன் ஆகியோர்களின் தலைமையில் நடைபெற்றது. அன்னதான விழாவிற்கு பொதுமக்களும் பக்தர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

# 189 வது வட்ட திமுக சார்பில் உதயநிதியின் உதய நாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்

சோழிங்கநல்லூர் டிச17



சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 189 வது வட்டம், பள்ளிக்கரணை அண்ணா எம்.ஜி.ஆர்.நகர், புதுதாங்கள், சென்னை 100, நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டம் 189 வது மாமன்ற உறுப்பினர் , வட்டக் கழகச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு குழு உறுப்பினருமான லயன் வா.பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுபிரமணியன் பொதுமக்களிடம் திமுகவின் அரசின் நலத் திட்டங்கள் பெயர்களை கூட்டத்தில் மகளிர் இடம் கேள்வி கேட்டு பதில் அளித்தவர்களுக்கு 1000 ரூபாய் பரிசாக தொடர்ந்து கேள்விக்கு பதில் அளித்தவர்கள் 1000 ரூபாய் வழங்கி திமுக அரசின் சாதனைகளை விளக்கி கூறி சிறப்புரையாற்றினார். தொடர்ந்து சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ் முன்னிலையில் மகளிர் அனைவருக்கும் 1000 க்கும் மேற்பட்டோருக்கு பட்டுப் புடவைகள் பரிசாக வழங்கி சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் வரவேற்புரையாக மாவட்ட பிரதிநிதிகள்: கே. தேவேந்திரன் பி.கே.தங்கம், வட்ட அவைத்தலைவர் கு. வெற்றிவேல், வட்ட துணைச் செயலாளர்கள் ஏ. சந்திர சேகரன், கே. ஆனந்தி, வட்ட பொருளாளர் ஏ. வீரமுத்து, பகுதி பிரதிநிதிகள்: வி. குமார் கே.பாபு, தலைமை கழகப் பேச்சாளர்கள் தமிழ் சாதிக், ஜெ.ஜெய், மா.இ.அ .அ. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. மா. து. செ. பாலவாக்கம் மு. மனோகரன், புனித தோமையார் மலை ஒ.க.செ,கோவிலம் பாக்கம் ஜி. வெங்கடேசன், மா. இ.து.அமைப்பாளர் ஜெ.இ. பாண்டியன், த. பொதுக்குழு உறுப்பினர்த.பஷீர், மா.இல.அ. அமைப்பாளர் எம். பார்த்திபன், 199 வது மாமன்ற உறுப்பினர் ஜி.சங்கர், 200வது ஆம் என்ற உறுப்பினர் அ. முருகேசன், 195 வது மா மன்ற உறுப்பினர் க. ஏகாம்பரம் பகுதி நிர்வா கிகள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள்: கே.டி.ரவி, பா.தேவ குமார், ஜி.ரவி, எஃப். ஆரோன்(எ)அரசு, என். மதனகோபால் என். சரவணன், வி. மணி, என். அண்ணாமலை, எம்.கே. ஏழுமலை மா. அ.த.அ, எஸ். செல்வம், ம.ப. அ. அமைப்பாளர்கள்: எஸ்.கவிதா, கே. சாந்தி, எஸ். வீரமணி, டி . ஹரிஷ், புல்லட் ராம் ம. ப. அ. து. அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி: எம். வினோத்குமார், எஸ். பிரபாகரன், எல். பாபு,ஈ. செல்லப்பாண்டி, ஓமர்ஷெரிப் ,ஆர்.இளங்கோவன், கே. மஞ்சுளா, எஸ் செல்வி, ரபீக், எ. இ. பன்னீர்,இ.ஆர்.அருண், ஆர் .கண்ணன், பி. ராகுல் நன்றி உரையாக 189 வது வட்ட பகுதி பிரதிநிதி வி. குமார் உள்ளிட்ட 189வது வட்ட தி. மு.க.சோழிங்க நல்லூர் கிழக்கு பகுதிசென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர்

தேனி, டிச.17



தேனி மாவட்டம், போடி நாயக்கனூர் ஒன்றியம், பூதிப்புரம் பேரூராட்சிக்குட்பட்ட 3ஆவது வார்டு வாழையாத்து பட்டி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தேசிய கால்நடை நோய்த் தடுப்பு திட்டத்தின்கீழ் கால் நடைகளுக்கான கோமாரி நோய் 6ஆவது சுற்று தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தொடங்கி வைத்தார்.

கோமாரி நோய் நம் நாட்டில் கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப் போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. தேனி மாவட்டத்தில் உள்ள பசு மற்றும் எருமை இனங்களை கோமாரிநோயிலிருந்துகாக்கும் வண்ணம் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் மூலம் கோமாரிநோய்தடுப்புசிமுகாம் இன்று (16.12.2024) முதல் 20.01.2025 வரை 36 நாட்களுக்கு தேனி மாவட்டம் முழுவதும் நடை பெற உள்ளது.

கோமாரி நோய் ஒரு வகையான வைரஸ் தெற்றினால் ஏற்படுகிறது. பொதுவாக இந் நோய் மாடுகளை அதிகம் பாதித்தாலும், எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி போன்ற இரட்டை குளம்புகள் கொண்ட கால்நடை இனங்கள் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றன. இந்த நோய் தாக்குதலால் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைகிறது. எருதுகளின் வேலை செய்யும் திறன் குறைகிறது. கறவை மாடுகள் சினை பிடிப்பது தடைபடுகிறது. இளம் கன்றுகளில் இறப்பு நேரிடுகிறது. கோமாரி நோயினால் இறப்புகள் குறைவாக இருந்த போதிலும், மேற்கண்ட பாதிப்புகளால் ஏற்படும் பொருளாதார இழப்பு அதிகம்.

இந்நோயிலிருந்து கால் நடைகளை காக்க, தடுப்பூசி போடுவதே சிறந்த வழியாகும். நடப்பாண்டு தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப்புறங்கள், குக்கிராமங்கள் மற்றும் நகர்புறங்களில் நான்கு மாதத்திற்கு மேல் உள்ள கன்றுகள் மற்றும் நிறை மாத சினை இல்லாத 1,01,328 பசு இனங்களுக்கும் 722 எருமை இனங்களுக்கும் தடுப்பூசிப் போட திட்டமிடப்பட்டுள்ளது. இத்தடுப்பூசி பணிகள் மேற் கொள்ள 53 கால்நடை மருந் தகங்கள், 3 கால்நடை மருத்துவ மனைகளில் உள்ள கால் நடை உதவி மருத்துவர், கால் நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்ட 53 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

போடிநாயக்கனூர் ஒன்றியம், பூதிப்புரம் பேரூராட்சிக்குட்பட்ட 3 ஆவது வார்டு வாழையாத்துபட்டி கிராமத்தில் நடைபெற்ற கால்நடைகளுக்கான கோமாரி நோய் 6ஆவது சுற்று தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்.

இம்முகாமில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ஆ. கோவில்ராஜா, பூதிப்புரம் பேரூராட்சித் தலைவர் கவியரசு, துணைத்தலைவர் பொன்னையன், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் மரு.சு.பாஸ்கரன், பூதிப்புரம் மற்றும் கோடாங்கிப் பட்டி கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், உதவியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர்.

# சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் - கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப்பணி தொடங்கி வைத்த அமைச்சர்

சிவகங்கை, டிச.17



சிவகங்கை மாவட்டம் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் , திருப்பத்தூர் மற்றும் கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறைகளின் சார்பில் 02 புதிய திட்டப் பணிகளுக்கு ரூ.12.95 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டியும், ரூ.06.50 இலட்சம் மதிப்பீட்டில் 01 முடிவுற்ற திட்டப்பணியினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் திறந்து வைத்தார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், இன்று (15.12.2024) மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டபணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணியினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும் தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகள் சார்பிலும் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் மேம்பாட்டு நிதியின் மூலமாகவும் பல்வேறு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காட்டாம்பூர் ஊராட்சிக்குட்பட்ட தேவரம்பூர் கிராமத்தில், உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் சார்பில் இன்றைய தினம் ரூ.217.17 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தீயணைப்பு நிலைய கட்டிடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இத்தீயணைப்பு நிலையத்திற்கான புதிய கட்டிடம் கட்டுவதற்கென தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின்கீழ் உடனடியாக இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோன்று, கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பனங்குடி ஊராட்சி பகுதியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் 202425 (SCPAR) கீழ் ரூ.1078.00 இலட்சம் மதிப்பீட்டில் முத்துப்பட்டி பாகனேரி சாலையில், இப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில், சருகனி ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்ட பாலம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டியும் என 02 பணிகளுக்கு மொத்தம் ரூ.12.95 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், அ.சிறுவயல் ஊராட்சிக்குட்பட்ட கல்லல் இரயில்வே நிலையம் அருகில் ஒன்றியப் பொது நிதியின் கீழ் ரூ.06.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையினை யும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே, தனிநபர் மற்றும் கிராமங்களின் மேம்பாட்டு வளர்ச்சிக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்களை பெறுவதற்கான உரிய வழிமுறைகள் குறித்தும், முதலில் அறிந்து கொண்டு, அதன்மூலம் பயன்பெற்று தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, மாவட்ட தீயணைப்பு அலுவலர் (பொ) ஆர்.அப்பாஸ், உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் எஸ்.செந்தில்குமார், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் சண்முகவடிவேல் (திருப்பத்தூர்), சொர்ணம் அசோகன் (கல்லல்), திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் கோகிலாராணி நாராயணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ரவி, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் ம நாராயணன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பெருமாள் (அ.சிறுவயல்), அருண் (பனங்குடி), ஒன்றியக்குழு உறுப்பினர் ரேவதி நெடுஞ்செழியன், கல்லல் வட்டார வளர்ச்சி அலுவலர் இரத்தினவேல் உட்பட சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள், ஒப்பந்ததாரர்கள் முருகேசன் (ஒமேகா கண்ட்ஸ்ரக்சன்ஸ்), சக்திவேல் (எஸ்.வி.எஸ் கண்ட்ஸ்ரக்சன்ஸ்) ஆகியோர் கலந்துகொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம், அஞ்சுகிராமம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

# தேசிய மக்கள் நீதிமன்றத்தின் மூலம் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு

பெரியகுளம் டிச 17

தேனி மாவட்டம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் தேனி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சார்பில் தேசிய மக்கள் நீதிமன்றத்தின் மூலம் நிலுவையில் உள்ள பல்வேறு வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி சொர்ணம் ஜெ.நடராஜன் தலைமை உரையாற்றி மக்கள் நீதிமன்றத்தை துவக்கி வைத்தார்.தேனி மாவட்ட சட்டப்பணிகள் ஆனைக்குழு செயலாளர் (பொறுப்பு) மற்றும் சார்பு நீதிபதி கீதா முன்னிலை வகித்தார்.




இந்நிகழ்வில் குடும்ப நல நீதிமன்ற நீதிபதி சரவணன், அமர்வு நீதிபதிகள் அனுராதா, கணேசன் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் சரவணக்குமார் நீதித்துறை நடுவர் ஜெயமணி வழக்கறிஞர்கள் பாலமுருகன், அரசன், பிரபாகர்,ஜெயம், வெள்ளைச்சாமி உள்பட பல வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.அதேபோல பெரியகுளம் ,உத்தமபாளையம்,ஆண்டிபட்டி,போடிநாயக்கனூர் ஆகிய நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள 10077 வழக்குகளுக்கு ரூ.10,98,85,668/க்கு தீர்வு காணப்பட்டது.



தூத்துக்குடி மாவட்டத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் மழை பெய்ததைத் தொடர்ந்து, பல்வேறு நீர்நிலைகளில் தண்ணீர் சென்று கொண்டிருக்கும் நிலையில் தூத்துக்குடி மாவட்ட கணிப்பாய்வு அலுவலர்/முதன்மைச் செயலாளர்/ ஆணையர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைகோ.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர்க.இளம்பகவத், முன்னிலையில் ஏரல் வட்டம் கீழபிடாரி ஊராட்சி அப்பன்குளத்தில் தாமிரபரணி ஆற்றில் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகள் குறித்து பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர்ச.அஜய் சீனிவாசன், செயற்பொறியாளர் (கீழ்தாமிரபரணி கோரம்பள்ளம் வடிநிலக்கோட்டம்) திருமதி வசந்தா ஆகியோர் உள்ளனர்.

# வில்விதையில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் பெற்று சாதனை குடியாத்தம் ஆசீர்வாத் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டு

வேலூர் டிச17

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக காயிதே மில்லத் அரங்கில் சாதனை படைத்த ராஜஸ்தானில் வில்விதையில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் பெற்று சாதனை படைத்த குடியாத்தம் ஆசிர்வாத் மாணவர்களுக்கு பாராட்டு, இராஜஸ்தான் மாநிலம்

புனாவில் கடந்த 08.12.2024 அன்று நடைபெற்ற தேசிய அளவிலான 11வது PKYAA (பைக்கா) வில்வித்தை 2024ம் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிப் பெற்று சாதனைப்படைத்த ஆசிர்வாத் இண்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளியை சார்ந்த Saisrinik Krishna (gold),



தங்கள் பெற்ற தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமியிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின் போது மாவட்ட விளையாட்டு அலுவலர் பாலமுருகன், ஆசீர்வாத் பள்ளியின் தாளாளர் மஞ்சுநாத், முதல்வர் பிரமிளா கண்ணன், உடற்கல்வி இயக்குனர் விஜயன், பயிற்சியாளர் சாரதி மற்றும் மேலாளர்கள் விக்னேஷ், தினேஷ் மற்றும் பலர் உடனிருந்தார்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டனர். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், மகளிர் திட்ட இயக்குநர் நாகராஜன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், மாவட்ட வழங்கல் அலுவலர் சுமதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் செய்தியாளர்களுடன் ஆய்வு

கன்னியாகுமரி டிச17

கன்னியாகுமரி மாவட்ட நீர்வளத்துறை சார்பில் திருவட்டார் வட்டத்திற்குட்பட்ட பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணையின் நீர்மட்டங்களை மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு செய்தியாளர்களிடையே தெரிவிக்கையில்:



தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் புயல் சின்னம் காரணமாக மழை பெய்து அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. எனவே மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்குட்பட்ட கடலோரப் பகுதிகள், மலை அடிவார பகுதிகள். தாழ்வான பகுதிகள், ஆற்றுப்படுகைகள். நீரேற்ற பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் மழைநீர் உட்புகாதவாறு தடுப்புகள், மணல் மூடைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சாலையோரப் பகுதிகள், மலைப்பகுதிகள், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் மரங்கள் சாய்ந்து விழமாலும், போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாலை ஓரங்களில் உள்ள கழிவுநீர் ஓடைகளில் மழைநீர் தேங்காதவாறு தண்ணீர் செல்லும் வகையில் சுத்தம் செய்து சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டத்தினை ஆய்வு செய்ததோடு. அவ்வப்போது அணைகளின் நீர் இருப்பு, நீர் வரத்து அகியவற்றினை கண்காணிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தபட்டுள்ளது. மேலும் கனமழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்படின் அணையிலிருந்து வெள்ளநீர் மறுகால் திறந்து விட்டால் அதனால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமா என்றும், மதகுகள் நல்ல நிலையில் உள்ளதா என்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு. நீர்வளத்துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. உபரிநீர் வெளியேற்ற வேண்டியது இருந்தால் அதற்கு முன்னதாகவே பொதுமக்களுக்கு தகுந்த அறிவிப்புகள் வழங்கியும், நீர்நிலைகள் தாழ்வான பகுதிகளின் அருகாமையில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவுகள், குடிநீர், கழிப்பறைகள் உள்ளிட்ட அத்தியாவாசிய தேவைகளை நிறைவே ற்றுவதோடு, அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தேவையான இவ்வாறு அளவு இருப்பு வைத்திட மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சாயல்குடி அருகே மூக்கையூர் கிராம ஆலய அஷ்டபந்தன மாஹா கும்பாபிஷேக விழா

இராமநாதபுரம், டிச.17

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம் சாயல்குடி அருகே மூக்கையூர் கிராமத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் கோவில், ஸ்ரீ முத்து இருளப்ப சுவாமி, ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி கோவில், ஸ்ரீ முனியசாமி கோவில், ஸ்ரீ கருப்பணசுவாமி கோவில் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஆலய அஷ்டபந்தன மாஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



சனிக்கிழமை நேற்று அனுக்கை விக்னேஷ்வர பூஜை, எஜமானர் சங்கல்பம், கிராம சங்கல்பம், கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகா லெட்சுமி ஹோமம், பூரணாகுதி வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கரணம், அங்குனுரார்யணம், கும்ப அலங்காரம், மற்றும் மங்கள இசையுடன் தீபாராதனை செய்து முதற்கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. இதனை தொடர்ந்து ஞாயிற்றுக் கிழமை அன்று இரண்டாம்கால யாகபூஜை, கோபூஜை, நாடி சந்தனம், மஹாபூர்ணாகுதி தீபாராதனை மற்றும் விமான, மூலஸ்தான மஹா கும்பாபிஷேகம், மற்றும் சிறப்பு அபிஷேகம், மங்கள இசையுடன் நடைபெற்றது. இதில் இடிவிலகி, சாயல்குடி, கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், மூக்கையூர் ஆகிய ஊர்களின் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்தும் மதுரை, சென்னை, போன்ற வெளி மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# மணிமுத்தா நதி, ஆதித்திருவரங்கம் ஊராட்சியில் ஆய்வு மேற்கொண்ட ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர்





கள்ளக்குறிச்சி டிச17

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் M.S.பிரசாந்த், IAS. ஆகியோர்கள், நேற்று ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் ஒன்றியம், சூளாங்குறிச்சி ஊராட்சியில் அமைந்துள்ள மணிமுத்தா நதியிலிருந்து தண்ணீரை அப்பகுதி ஏரிக்கு குழாய்கள் அமைத்து அதன் மூலம் தண்ணீர் நிரப்பும் பணிகளை மேற்கொள்ள தண்ணீர் குழாய் அமைக்கும் வழித் தடங்களை ஆய்வு மேற்கொண்டனர்.

ஆதித்திருவரங்கம் ஊராட்சியில் அமைந்துள்ள, அருள் மிகு ரங்கநாத சுவாமி திருக்கோவிலில் ரூபாய் 12 கோடிகள் மதிப் பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகள், திருக்கோவிலை சுற்றி திருத்தேர் வளம் வரும் சாலைகளை மறுசீர் அமைக்க இருக்கும் பகுதிகள், மற்றும் திருக்கோவிலுக்கு சொந்தமான பாழடைந்த கட்டிடங்களை புதுப்பிக்கும் பணி அமைத்தல் போன்ற பணிகளை ஆய்வு மேற்கொண்டு, அரசு அதிகாரிகளுக்கு திருப்பணிகளை துரிதப் படுத்தும்படி அறிவுறுத்தினார்கள். இந்த ஆய்வின்போது ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு துறைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் என அனைவரும் உடன் இருந்தனர். இந்த ஆய்வின்போது ஒன்றிய கழக செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு துறைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் என அனைவரும் உடன் இருந்தனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு

திருக்கோவலூர். டிச17

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

கடந்த 47 ஆண்டுகளாக கபிலர் விழாவை நடத்திவரும் திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செயல் தலைவர் சீநி. பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

பொதுச் செயலாளர் கி.மூர்த்தி வரவேற்றார். பொருளாளர் கா.நடராசன், துணைத் தலைவர்கள் தே.முருகன், கா.பி. சுப்ரமணியன், தணிக்கையாளர் வே. அப்பர் சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



செயற்குழுவில் புதிய தலைவராக கல்வியாளர் தே.முருகன், பொதுச் செயலாளராக நல்லாசிரியர் வே. அப்பர் சுந்தரம் , பொருளாளராக கா.நடராசன், மற்றும் துணைத் தலைவர்களாக புலவர் கா.பி. சுப்ரமணியன், அரகண்டநல்லூர் கி.மூர்த்தி, கவிஞர், சிங்கார உதியன் தேர்வு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக எஸ்.ஜி. பழனிவேல், ஜி. கோவிந்தன், ந. திருவாணன், கே.டி.சத்திய மூர்த்தி, வே. ஜெயக்குமார், முனைவர் வீர.நாராயணன், கு. கல்யாண் குமார், பா.இரவிச்சந்திரன், ஆர். ஜெயராமன், அருணாசலம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஜி. கோவிந்தன் நன்றி கூறினார்.

# சிவகங்கையில் நாளை உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்

சிவகங்கை, டிச.17

சிவகங்கை மாவட்டத்தில் நாளை உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம், சிவகங்கை வட்டத்தில் நடைபெறவுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.



அரசாணை (நிலை) எண்:22 நாள்: 29.01.2024ன் படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் “உங்களைத்தேடி உங்கள் ஊரில்” என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்துமாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, வருகின்ற 18.12.2024 அன்று சிவகங்கை வட்டத்தில் “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்ட முகாம் நடைபெற உள்ளது.

மேலும், அன்றைய தினம் பிற்பகல் 04.30 மணி முதல் 06.00 மணி வரை பொதுமக்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் சிவகங்கை வட்டம், மதகுபட்டி பேருந்து நிலையம் எதிரில் அமைந்துள்ள சந்திரசாமி திருமண மஹாலில் நடைபெற உள்ளது. மேற்படி கலந்தாய்வு கூட்டத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# தாம்பரத்தில் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் ஆலோசனை கூட்டம்

செங்கல்பட்டு டிச.17



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு பகுதி சார்பில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நடைபெறுவதை முன்னிட்டு கலந்து ஆலோசனை கூட்டம் கிழக்கு தாம்பரத்தில் தனியார் திருமண மண்டபத்தில் தாம்பரம் தெற்கு பகுதி செயலாளர் கெட் எம் தர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனேகை முருகேசன் கலந்து கொண்டு முதலாம் ஆண்டு இறுதி அஞ்சலி எவ்வாறு பணியாற்றுவது குறித்து ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் மா செழியன், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் அபிநயா, தெற்கு பகுதி துணைச் செயலாளர் ஏழுமலை, தெற்கு பகுதி துணைச் செயலாளர் தமிழரசி, ஐ.கே.தர்மா, எஸ்.சதீஷ், பாலமுருகன், தெற்கு பகுதி கேப்டன் மன்ற டாக்டர் நெரும்பூர் ராஜேந்திரன், சுமதி, திலகா, வட்டச் செயலாளர்கள் 61வது மகேந்திரன், 62வது காஜா மொய்தின், 63வது குமார், 47வது சந்தோஷ் குமார், 44வது கன்னியப்பன், 49வது காந்திராஜ் குமார், அவைத்தலைவர்கள் 61வது பிரித்வி ரவி, 63வது தேன் என்கின்ற லட்சுமி காந்த், 47வது ராஜ்குமார், 63வது நிர்வாகிகள் ஏழுமலை அசோக் விஜயன் பிரதாப் உட்பட ஏராளமான கலந்து கொண்டு நிகழ்ச்சியில் சிறப்பித்தனர்.

# முதுகுளத்தூர் அங்கன்வாடி மையத்தில் முறையாக ஊட்டச்சத்து உணவுகள் வழங்கவில்லை என புகார்

முதுகுளத்தூர் டிச17



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பேரூராட்சியில் தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் துறை மூலம் அங்கன்வாடி மையங்கள் செயல்படுகிறது. இந்நிலையில் கடந்த சில மாதங்களாக முறையாக குழந்தைகளுக்கு சத்துமாவு, முட்டை போன்ற ஊட்டச்சத்து உணவுகளை வழங்கவில்லை என்று புகார் எழுந்துள்ளது.

அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு, சுகாதாரம், முன்பருவ கல்வி வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையங்களுக்கு வரும் சில குழந்தைகளுக்கு மட்டும் ஊட்டச்சத்து உணவுகளை கொடுத்து விட்டு சில தவிர்க்க முடியாத காரணங்களினால் தொடர்ந்து அங்கன்வாடி மையங்களுக்கு வர முடியாத ஏராளமான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவுகளை தொடர்ந்து வழங்கவில்லை.

ஆகையால் அந்த சத்துமாவு, முட்டை, போன்றவை யாருக்கு கொடுக் கப்பட்டது. என்பதை மாவட்ட நிர்வாகம் மற்றும் துறை அதிகாரிகள் அங்கன்வாடி மையங்களில் ஆய்வு செய்து உரிய விசாரணை மேற்கொண்டு குழந்தைகளுக்கு தொடர்ந்து ஊட்டச்சத்து உணவுகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்தனர்.



தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தக நிறுவனம் மூலம் கல்லூரிகளுக்கான நடைபெற்ற புத்தாக்க படைப்புகளுக்கான போட்டியில் மாநில அளவில் முதல் இடம் பெற்று ரூ.1லட்சம் பரிசு பெற்ற மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவர்களுக்கும், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய கல்லூரி மாணவர்களுக்கும் மூன்றாம் இடம் பிடித்த வேலம்மாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா பாராட்டினார். கூடுதல் ஆட்சியர் (ஊரக வளர்ச்சி முகமை) டாக்டர்.மோனிகா ராணா,உதவி ஆட்சியர்(பயிற்சி) வைஷ்ணவி பால், ஆகியோர் உடன் உள்ளனர்.

# பெரியகுளம் த.வெ.க ஆலோசனைக் கூட்டம் மாற்றுக் கட்சியினர் இணையும் விழா



பெரியகுளம், டிச.17

தேனி மாவட்டம் பெரியகுளம் அடுத்துள்ள தேவதானப்பட்டியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் ஆணைக்கினங்க பொதுச்செயலாளர் புஸ்ஸி. ஆனந்த் வழிகாட்டுதலின்படி

தேனி மாவட்ட தலைவர் லெப்ட் பாண்டி முன்னிலையில் தேவதானப்பட்டி பேரூராட்சி பகுதியில் ஆலோசனை கூட்டம் மற்றும் மாற்றுக்கட்சியினர் இணையும் விழா நடைபெற்றது.

இதில் பல்வேறு மாற்றுக் கட்சியினை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர்கள் தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் தேனி மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தேவதானப்பட்டி பேரூர் கழக நிர்வாகிகள் ஜெயவீரணன், காந்திராஜா, சின்னமணி, தினேஷ்பாபு, முத்துக்குமார், காளிதாஸ், மணிமுத்து, பால்பாண்டி, லியாகத்அலி, ஆகியோர் உட்பட பலர் இருந்தனர்.

# தேனி மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நலத்திட்ட உதவிகளை வழங்கிய ஆட்சியர்

தேனி டிச17



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 215 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டு மனைப்பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 215 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலா ரூ.7,350/ மதிப்பிலான செயற்கைகால் 2 நபர்களுக்கும், தலா ரூ.4,700/ மதிப்பிலான செயற்கைகால் 8 நபர்களுக்கும் மற்றும் தொழிலாளர் நலத்துறை சார்பில் பணியிடத்து விபத்து மரணத்தொகையாக இறந்த நபரின் வாரிசுதாரருக்கு ரூ.5,00,000/க்கான காசோலையினை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

முன்னதாக, முன்னாள் படைவீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/மகள்களை இராவணுவப் பணிக்கு அனுப்பிய பெற்றோர் சாந்தி என்பவருக்கு வெள்ளிப் பதக்கத்தினை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அபிதா ஹனீப், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்து மாதவன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சசிகலா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் மனுஷியாம் சங்கர், உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) திருமதி கலைச்செல்வி, மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 369 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன

கன்னியாகுமரி டிச17





கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதி யோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 369 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் வட்டம் இனையம் சின்னத்துறை மீனவ கிராமத்தைச் சேர்ந்த கில்பர்ட் (வயது 67) என்பவர் கேரள மாநில கொச்சி மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 01.08.2023 அன்று ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற நிலையில் 03.08.2024 அன்று ஆழ்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியால் மரணமடைந்தார். அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் மதிப்பிலான காசோலையினை அவரது மனைவி திரு.ஜெயின்மேரி என்பவருக்கு மாவட்ட ஆட்சியர் ஆர். அழகுமீனா, வழங்கினார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், மாவட்ட மீன்வளத்துறை துணை இயக்குநர் சின்னகுப்பன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.பிரியா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கனகராஜ், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சேக் அப்துல்காதர், அரசு அலுவலர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சிவகங்கை, டிச.17



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டு மனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொது மக்களிடமிருந்து 304 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட வழங்கல் அலுவலகத்தின் சார்பில் 04 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள் உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், டிச.17



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 388 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித் தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடா;பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனா;. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொது மக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர். இரா.கோவிந்தராஜலு அவர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியா; தனலெட்சுமி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் இளங்கோ அவர்கள்;; மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலபி கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161